தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஹு வைகாசிமீ 32உ (14-6-'22.) | ப. 8.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை மார் முதுகு இடுப்பு	வலி	தேள் பாம்புக் பூச்சிக் விஷக்	கடி	பல் கால் காது கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்தர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிட்டெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

தபால் கூலியுள்பட. சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. **5—0—0**

அரை வருஷத்திற்கு ரூ. **3—0—0**

‘தமிழ் உலகு’ காரியாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்

மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

ஸத்யாக்ரஹம் (தொடர்ச்சி)	....	58
நமது ராஜப்பிரதிநிதி	....	59
ஓர் விஷயம் (தொடர்ச்சி)	....	60
இறப்பினும் வழுவாக்கற்பு	....	61
சித்திரா. லின் 3	....	62

தமிழ் உலகு

துந்துபிஞு வைகாசிமீ 32உ.

ஸத்யாக்ரஹம்

(தொடர்ச்சி)

யுத்தமென்ற உபாயத்தால், வெடிமருந்து கத்தி துப்பாக்கிகளுடன் அவர்களே யுத்தம் செய்யட்டும். நமக்கு அவ்வுபாயங்கள் முழுவதும் அவசியமில்லை. மேலும் நம்முடைய ஸத்வகுணத்திற்கும் அம்மாதிரியான ராக்ஷஸ யுத்தத்திற்கும் வெகு தூரம். நாம் தேர்ந்தெடுக்கும் உபாயம் நம்முடைய குணத்திற்கு ஒத்ததாக இருப்பது மேன்மை. எக்குரூரமான சட்டத்தையும் தள்ளிவிடும்படி, நிர்ப்பயமான நம் ஸத்வகுணத்தாலேயே, கவர்ன்மெண்டாரை நாம் தூண்டுவோம். நாம் ஸத்யத்திலேயே மோகித்து, நம் ஸத்யத்தால் மாத்ரம் ஜயிக்க விரும்புகிறோமே தவிர, வேறு எவ்வித உபாயத்தையும் நாம் அங்கீகரிக்கவில்லை. ஹரிச்சந்திரன் ஸகல துக்கங்களையும் தன் மாசற்ற ஸத்யத்தால் கடைசியாக வென்றதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? நாம் ஸத்யத்தில்தான் மோகிப்போம். நாம் ஸத்யத்தில்தான் ஆனந்த பரவசமடைவோம். ஸத்யத்தையே கடைப்பிடித்து பிறருக்கு யாதொரு ஹிம்ஸையும் விளைவிக்காமல், எந்த துக்கங்கள் நேரிடினும், நாமே யனுபவிக்க வித்தமாக இருந்து, அச்சட்டம் தள்ளப்படுவதை நம் கண்களால் காணுவோம். மேலும் அந்த சமயத்தில் பெரியதோர் அதிர்ஷ்ட வசமாக, டிரான்ஸ்வாலில் முன்னொருதடவை, இந்தியர்களுக்குள் தலைமையை வகித்து ஸத்யத்தால், மகத்தான காரியத்தை ஸாதித்துக்கொடுத்த மகாத்மா காந்தி அப்பொழுதும், தலைவனாக இருந்து நடத்த முன்வந்தார். நியாய மில்லாமல் சட்டதிட்டங்களை பாஸ் செய்யும் ஓர் கவர்ன்மெண்டாரைத் திருத்துவதற்கு அதுதான் சரியான வழியென்று தீர்மானித்துவிட்டார். இந்த “ஸத்யாக்ரஹ” மார்க்கத்தில், உழைப்பதற்கும், பயமின்றி எக்கஷ்டங்களையும் பொறுத்து, சுகத்தையும், பொருளையும், திரவ்யத்தையும், உயிருடன் கூட, ஜனங்களின் க்ஷேமத்திற்காகத் தியாகம் செய்யத் துணிந்த தேசாபிமானிகளின் மனமொத்த ஐக்கியத்தை விரும்பினர். கஷ்டங்களைத் தாங்குவதற்குத் தகுதியானபௌருஷம் நம்மிடம் இருக்கின்றதென்பதை செவ்வையாக நாம் காண்பித்தோமானால், கவர்ன்மெண்டார் நம்மை அம்மாதிரி எப்பொழுதாவது அவமதிப்பார்களா? கஷ்டமில்லாமல், எவ்வித சுகமும் மனுஷ்யனுக்குண்டாகமாட்டாது. அது போலவே எந்த தேசத்திலும், சுகத்தை மாத்திரம் ஓர் ஜனங்கள் அபேக்ஷித்தார்களேயாகில், அதைப்பார்க்கிலும் அத்தேசத்திற்கு தௌர்பாக்கியம் வேறு ஒன்றுமில்லை. ஜர்மானியர்கள் உலகம் முழுமையும் ஜயிக்கவேணுமென்ற வெறிகொண்டு, அக்கொடும் போர்புரிந்த காலத்தில், ஸ்வாதீனத்தையே பிராணனுக்கு மேலாக எண்ணும் இங்கிலீஷார், சுகத்தைப் பெரிதாக மதித்து, பௌருஷமற்ற ஸ்திரீகள்போல் நடந்தார்களா? யுத்தமாரம்பத்தில் போதுமான போர் வீரர்கள் இல்லாதிருந்தும், என்ன ஆவேசத்துடன், என்ன தேசாபிமானமென்ற ஆக்ரஹத்தோடு, தங்கள் தேசத்தை சத்துருக்களிடமிருந்து காப்பதற்கு, பிரிடிஷ் ஜனங்கள் திரண்டுவந்தார்கள்! அவ்வளவு தீரர்களாக நாமும் நடக்காவிடில், இந்தஜாதியார் நம்மிடம் என்ன கௌரவம் வைக்கக்கூடும்? மானத்தைக் காட்டிலும் பிராணன் பெரியதல்ல, என்று படித்திருந்தும் எக்ஷணத்திலும், அவமதிப்பைத் தாங்காது, புருஷர்களாகவும், தேசாபிமான முள்ளவர்களாகவும், நாம் நடக்கத் தவறினால், ஹரிச்சந்திரனென்னும் பெயரைச் சொல்வதற்கு, நாம் தகுதியுள்ளவர்களா? கெட்ட சட்டத்திற்குத் தலைகுனிவதான மானபங்கத்தைக் காட்டிலும், கவர்ன்மெண்டாரின் இதரசட்டங்களை அனுசரிக்காததானுண்டாகும், நிஷ்டூரத்தை சகித்து நம் தீவிரமான வெறுப்பைக் காட்டத் தவறினால், நாம் ஸ்வராஜ்யத்திற்கு உரியவர்களா? சட்டங்களுக்கு கீழ்ப்படியாததால் வரும் ஆபத்தை, கலங்காமல் அனுபவிப்பதால், நாம் ஸத்யாக்ரஹ மார்க்கத்தை அனுசரித்தவர்களாவோம். எதற்குட்பட்டாலும், அந்த ரௌலட் ஆக்டை மறுப்பது நம்முடைய முதல் கடமையாக ஆயிற்று. அப்போது ஆயுதங்களுடன் போர்புரிய நினைக்கவில்லை. அதற்கு மாறாக, பிறருக்கு எவ்வித கஷ்டத்தையும் உண்டுபண்ணாமல், நாமே எல்லாவற்றையும் ஸஹிப்பதற்குத் தயாராக இருந்தோம். சரீரத்தின் ஹானிக்காக நடுங்கவில்லை. சரீரம் பிறரின் கையில் வசப்பட்டாலும், ஸத்யம், தைர்யம், தேசாபிமானம், இவைகளால் நிரம்பிய நம்முடைய மனதைக் கட்டுப்படுத்த ஒருவருமில்லை. பிறருக்கு ஹிம்ஸையை விதிக்காமல், நாமாகவே நம் தலையின் மீது ஹிம்ஸைகளைவரவழித்துக்கொள்கிறோம். இதனால், கவர்ன்மெண்டார், ஜனங்களின் அபிப்பிராயத்தை அறியஇச்சித்தார்களே யாகில், நம்முடைய வெறுப்பைஅறிந்துகொள்ளட்டும். பேசுவதில்சமர்த்தர்களான நாம், காரியத்திலும் நம் தீர்மானததை அஞ்சாமல் பிரகாசப் படுத்துவோம். நம்முடைய அபிப்பிராயங்களை இந்த கவர்ன்மெண்டார் செவிகொடுத்துக் கேழ்க்கும்படி, நடக்கவேணுமென்றால், இந்த ஸத்யாக்ரஹ மார்க்கத்தைத் தவிர வேறு ஒன்றும் புலப்படவில்லை.

ஸத்யாக்ரஹத்தால் நாம் ஒருவருக்கும் கெடுதி செய்யப் போவதில்லை. ராஜாங்கத்தாரின் தண்டனைகள் ஸத்யாக்ரஹிகளை ஒருபோதும் பாதிக்கமாட்டா. வேழத்தில் பட்டுருவும் கோல் பஞ்சில் பாயுமா? அதைப்போல, நாம் ராஜாங்கத்தாரின் தண்டனைகளாகிய பாரையும் ஸத்யாக்ரஹிகளின் மனதான பசுமரத்தின் வேருக்கு நெக்குவிட

நமது ராஜப் பிரதிநிதி

நமது தேசத்தில் இப்பொழுது ராஜப்பிரதி நிதியாய் அமர்த்தப் பட்டிருக்கும் லார்ட் ரெடிங் என்பவரைப்பற்றியும் அவரது பால்யப் பருவத்தைப் பற்றியும் ஒவ்வொருவரும் கூடுமானவரையில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகையால் ஆங்கிலேய ரொருவர் அவரைப்பற்றி கூறியதை பின்வருமாறு மொழிபெயர்க்கின்றோம்.

ரூவஸ் ஐஸாக்ஸ் என்று பெயர்பூண்ட லார்ட் ரெடிங் சீமான் வயது 27க்கு மேற்பட்டுத்தான் ஓர் வக்கீலாயினர். கலாசாலையில் மாணாக்கனாய் இருக்கும் காலத்தில் அவர் யாருக்கும் அடங்காதவராய், கலாசாலையின்நிபந்தனைகளுக்குஉட்படாத பையனாக இருந்தார். அவருடைய துணிவுகரமான புத்தியானது அவர் தகப்பனார் செய்து கொண்டிருந்த வியாபாரத்தில் (Stock Broker) அவர் மனதை நாட்டவில்லை.

நியாயஸ்தலத்தில் வெகு சீக்கிரத்தில் சிறப்பையடைந்தார். மேலும் வயது 37 ஆவதற்குமுன் ஒவ்வொரு பெரிய வியவகாரங்களிலும் வக்கீலாய் வாதித்தார். இளம் பிராயத்தில் அவர்விளையாட்டு புத்தியையும், பிறகு வக்கீலாய் அவர் காட்டிய அபார சக்தியையும் நோக்குங்கால் ஜனங்கள் மிகவும் வியப்புற்றார்கள். ஆனால் உண்மையில், ஓர் வக்கீலுடைய நடக்கைகள் அவரை முழுவதும் பற்றியதாய்த் தெரியவில்லை. ஓர் உயர்ந்தநியாயாதிபதியின் குணங்களைப் பெரும்பாலும் பெற்றிருப்பினும், நியாயாதிபதிகளின் சரித்திரத்தில் முதன்மையாகக் கூறப்பட்டிருக்கும் நியாயாதிபதிகளில் இவரும் ஒருவராய் எண்ணப்படுவாரோ என்பதில் நமக்கு சிறிது ஸந்தேகமுண்டு.

புதிய சட்ட நிர்மாணங்கள் ஒன்றும் அவர் செய்யவில்லை. அவருடைய நியாயதீர்ப்புகளில் வெகு ஸ்வல்பமானவைகளே ஞாபகப்படுத்தக் கூடியவைகள். அவர் இயற்கையில் சாந்தமும், பெருந்தன்மையும் வாய்ந்தவராயினும், சிலஸமயங்களில் நியாயஸ்தலத்தில் வீற்றிருக்கும் பொழுது கொஞ்சம் சலிப்புற்றவராகவே காணப்படுவார். அதன் உண்மையாதெனில், இவர் இவைகளைவிட உலகவியவகாரங் களுக்கு ஏற்றவர் என்பதே. அவர் மனமானது உண்மையாய் அவைகளால் விலங்கிடப்பட சம்மதிக்கவில்லை. சிலமனதிற்கு,ஓர் கியாதி பெற்ற வக்கீலாயும், தலைமை நியாயாதிபதி பட்டம் பெற்றவராயுமுள்ள ஒருவர் என்றுமழியாத ஓர் புகழை, இவைகளைவிட்டு வேறு மார்க்கத்தில் இயற்கைக்கு விரோதமாய் அடைந்தார் என்பதுஆச்சரியப்படக்கூடியதாயிருக்கிறது. ஆனால் ஓர் காந்தத்தைப் போலத் தன்னிடமே இழுத்துக் கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்த இந்த சட்டமாகிய வலைக்குள் அகப்படாத சிலரில் நமது பிரபுவும் ஒருவரே. உலகத்தின்கண் மிகவும் கியாதி பெற்ற 'நெபோலியன்' என்ற பெயர் கொண்ட பிரஞ்சு சக்கிரவர்த்தி நூற்றுக் கணக்கான போர்களில் ஜயக் கொடியை நாட்டியவராய் இருப்பினும், ஜனங்களின் க்ஷேமத்தையும் களிப்பையும் விருத்தி செய்வதில் ஓர் தேசாபிமானியாகவே கொண்டாடப் பட்டாரே யொழிய சண்டையிலேயே விருப்பமுடைய ஓர் போர்வீரனாய்க் காணப்படவில்லை. அப்படியே நமது பிரபுவும் ராஜாங்க ஸபையில் அநேகம் போர்களை செய்த புகழ் கொண்ட போர்வீரன். கேவலம் செல்வத்திற்காக மட்டும் செலவழித்த புத்தியுடையவரல்லர்.

அவர் பிரசித்தி பெற்றது சில அபூர்வ கேஸ்களில் அவர் வாதித்த ஸாமர்த்தியமல்ல. மற்றும் இந்த பயங்கரமான யுத்தாரம்பத்தில் நாட்டின் பண விஷயமாய் அவர் செய்த சில யுக்திகளும், அமெரிக்காவிற்கு தூதனாய் அனுப்பப்பட்டதும், நமது தேசத்திற்கு ராஜப்பிரதி நிதியாய் தேர்ந்தெடுக்கப்பட்டதுமே.

அவர் அநேக வியவகாரங்கள் நடத்திய அநுபோகமும் பால்ய முதல் வியாபாரத்தின் வரவு செலவுகளில் தேர்ச்சி அடைந்ததும் பிற்பாடு அவர்செய்த அற்புத செயல்களுக்கு அறிமுகம் செய்வித்த சிநேகனே தவிர அவைகளுக்கு ஆதாரமாயிருப்பதற்கு போதாதவைகளாகவே இருக்கின்றன. இப்பொழுது நமது தேசத்திற்கு திலகம் போல் விளங்கும் மகான்களில் இவரும் ஒருவர். கேவலம் புத்தக ஆராய்ச்சியினாலேயே தன் அறிவை பரவச்செய்தவரல்ல. உலகானுபவத்தினின்றே தன் புத்திக்கு சிறப்பை அளிப்பவராயினர்.

ஒவ்வொரு வக்கீலும் அநேக விஷயங்களினின்றும் தனக்கு அனுகூலமாயும், முக்கியமாயும் இருக்கும் விஷயங்களை தேர்ந்தெடுக்கும் சாமர்த்தியமும், அதிலேயே தன் மனதை நிலை நிறுத்தி ஆழ்ந்து யோசிக்கும் தன்மையும் உள்ளவர்களாதலால், இவ்வித சக்தியே பெரும்பான்மையும் நமது ராஜப்பிரதி நிதிக்கு பிற்காலம் அவர் செய்த ஆச்சரியகரமான செயல்களில் தேர்ச்சி அடைய ஈசுவரனால் அளிக்கப்பட்ட வரன்களாய் நின்றன, என்பதில் ஐயமுண்டோ? அவருக்கிருக்கின்ற பொறுமையானது அவர் பிறந்த யூதர் ஜாதிக்கு முற்றிலும் விரோதமானவை. நூதன காரியங்களை அறிவதிலும், அப்பியஸிப்பதிலும் நாட்டமுடைய அவரது புத்தியும், எல்லாருடனும் ஸரஸமாய்ப் பழகும் அவர் நடத்தையும் மிகவும் மெச்சத் தகுந்தவைகள்.

சண்டையின் துவக்கத்தில் நமது ராஜாங்கத்தாரை மிகவும் கலக்கமுறச்செய்த செல்வத்தின் குறைவை நிவர்த்தி செய்த மகான் இவரேயென்பது யாவரும் அறிந்த விஷயம். இவ்விஷயங்களில் தேர்ச்சி அடைந்த புத்திமான்கள் ராஜாங்கத்தின்கண் அநேகமாய் இருப்பினும் இவர் ஒருவரேதான் செய்திருக்கும் தீர்மானத்தை நடத்திக்காட்ட முன்வந்த தைர்யபுருஷர். தன்னுடைய கட்சிக்காரர்கள் தவறாய் நடந்திருக்கிறார்களென்று அவர் மனதிற்கு தெளிவாய்ப் புலப்படுமாயின், வியவகாரத்தொகை நூறல்ல, லக்ஷக்கணக்காயிருப்பினும் ஒரே மனவுறுதியுடன் சமாதானம் செய்து கொள்வதற்கே தூண்டுவார். அம்மனவுறுதியே நம்முடைய தேச சரித்திரத்தில் விஸ்தாரமாய் வரையப்பட்டிருக்கும் அம் மனோதைர்யத்திற்கு உதாரணமாய் நின்றது.

உபயோகமற்ற ராஜாங்கக் கட்சிகளில் இவர் ஓர் குழந்தை போன்றவர். ஓர் அறியா பாலகனைப் போல் ஸபையில் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் வாதங்களையும் ஸமாதானங்களையும் வேடிக்கையாய், ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் அவர் பார்வை, காரிய நிர்வாகத்தில் அவர் காட்டும் அற்புத ஸாமர்த்தியம், இவையிரண்டும் வியக்கத் தகுதியுள்ளன.

அவர் லிபரல் கட்சியில் சேர்ந்தவர். ஓர் திரத்தாருக்கு அவர்கள் எண்ணங்களை எடுத்துக்கூறும் தலைவனாய் அவர் செய்த உபந்யாஸங்களைக் காட்டிலும் சுலபமாய் தன் எண்ணங்களையும் யுக்திகளையும் வெளிப்படுத்திய அவர் உபந்யாஸங்களே முதன்மையானவை. பொலிடிகல் மேடையில் அவர் அநேகமாய் தோல்வியே அடைந்திருப்பி

னும், தனிமையான ஆலோசனை சபைகளில் ஒவ்வொரு விஷயங்களினின்றும் அதன் ஹிருதயத்தைப்பிரித்து எடுக்கும் கொஞ்சமேனும் கலக்கமடையாத அவர் தைர்யம், இணையல்லாத் துணைவனாதுமன்றி ஓர் விலையில்லாத ஆபரணமாகவும் அவரை விளங்கச்செய்யலாயிற்று. அமெரிக்காவுக்கும் ஆங்கிலேய ராஜ்யத்துக்கும் ஓர் நட்பை உண்டுபண்ணியதற்கு இவ்வாங்கிலேய ராஜ்யம் இவருக்கே கடமைப்பட்டதாயிருக்கின்றது. இவர் ராஜ்ய தந்திரங்களில் காட்டிய சாமர்த்தியமும் பிறகு நமது தேசத்திற்கு ராஜப்பிரதிநிதியாயிருந்து செய்யும் காரியங்களும், மேன்மேலும் அவரை உயர்ந்த பதவிக்கு உரித்தவராய்ச் செய்கின்றது. முழுவதும் ஒருவனுடைய புத்திவன்மையை அபகரிக்கும் தன்மையும் இதர விஷயங்களில் அவன் புத்தியை செயலற்றதாய் செய்யும் வன்மையும் உடையது சட்டசாஸ்திரம் என்னும் வெறுப்பான கொள்கையை முதல் முதல் மாற்றுவதற்கு உதாரணமாய் நின்றது நமது ராஜப்பிரதிநிதியே. சட்டமே தத்துவ சாஸ்திரமாயும் அதை அப்பியஸிப்பதே ஓர் தபஸாயும் நினைக்கும் சில வகுப்பு வக்கீல்கள் உளர். ஸ்டுவேர்ட் அரசர்கள் நாளில் இருந்த வக்கீல்களைப் போல் தேசத்தின் ஸ்வதந்திரத்தை விருத்திசெய்த இத்தொழிலானது தற்காலமும் ஸ்வதந்திரத்திற்கே ஓர் திறவுகோலாய் உபயோசப்படுத்தப்படுவதை நாம் அநேகரிடம் காண்கிறோம். நமது பிரபுவும் இவ்விரண்டாம் வகுப்பைச்சேர்ந்தவரே. தன்னுடைய ஸ்வதந்திரத்துக்கு முழுதும் வக்கீல்களுக்கே கடமைப்பட்டிருக்கிற இவ்வாங்கில தேசமானது இதுகாறும் தன் நன்றியை செலுத்தாமலிருந்தது ஆச்சரியமானது. இவ்விதமான ஓர் இராஜப்பிரதிநிதியை அடைவதற்கு இந்தியர்கள் ஆசைகொண்டதும் ஸஹஜமே. அவர் இந்தியாவுக்கு தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார் என்று கேட்டு இந்திய ஜனங்களை ஆனந்தத்தில் முழுகச்செய்தது அவருடைய நியாயாதிபதி பட்டமேயொழிய அவருடைய உருவமாவது குணங்களாவது அல்ல. இங்கிலாந்து தேசத்தின் அரசியலுடைய கொடுமை எவ்வளவு தூரம் அடக்கச்சட்டமான்று உபயோகப்படுத்தப்பட்டது என்பதை தெரிந்தவர்களுக்கு வக்கீலான இராஜப்பிரதிநிதியிடம் எவ்வளவு நம்பிக்கையுண்டாயிருக்கக்கூடும் என்பது நாம் ஊஹிக்கக்கூடியதாயிருக்கிறது. நமது பிரபுவும் அவர் இங்கிலாந்தில் செய்த பல உபந்யாஸங்களினால் ராஜ்யத்தை ஆளுவதற்கு சட்டமே ஓர் ஆயுதமாயிருக்கின்றது என்ற நம்பிக்கை பூரணமாய் கொண்டவர் என்று தெரியவருகிறது. அவருடைய அறிவையும் காரியங்களையும் ஆராச்சிசெய்ய இந்தியா ஓர் இடமாய் இருக்கின்றது. நமது ராஜப்பிரதிநிதி இன்னமும்தான் ஓர் நியாயாதிபதியே என்ற எண்ணத்துடன் நமது கஷ்டங்களை கவனித்து நமது தேசத்திற்கு அதன் நியாயமான உரிமைகளை அளிப்பார் என்ற முழு நம்பிக்கையுடனேயே கடவுளை அவர் நீடூழி காலம் வாழ்கவென்று பிரார்த்திக்கிறோம்.

ஓர் விஷயம்

(தொடர்ச்சி)

அந்தகர்களுடைய சந்தோஷத்திற்கொன்றும் குறைவில்லையென்பதை வெகுவாய் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நான்கு பக்கங்களிலும் பேசப்படும் விஷயங்கள் காதில் விழுவதுடன் பிறருடைய அப்பிரியமும் கோபமும் கூடிய முகங்களைப் பார்க்காதிருக்கும் அதிர்ஷ்டமும் அவர்களுக்குண்டாகின்றது. கண்ணினுதவியுள்ளவர்களைக் காட்டிலும் பதின்மடங்கதிகமாகவே அவர்கள் தங்கள் காதுகளடையும் கூர்மையால் கேட்டு சங்கீதத்தின் அரிய குணத்தையும் இனிமையும் அறிந்து கொள்ளுகிறார்கள். அந்தகனொருவன் பெயர் பெற்ற பாடகனாவதை யார்தான் அறியமாட்டார்? சங்கீதத்தைக்கேட்பதாலுண்டாகும் ஆறுதலானது பார்வையற்றவர்களின் அந்தகாரத்தை யகற்றும் பேருபகாரமாகின்றது. அரைச்செவிடாயிருப்பவனுடைய வேதனையும் கலக்கத்தோடும் கூடிய முகத்தை மனவமைதியுடன் விளங்கும் அந்தகனுடைய முகத்துடன் யார்தான் ஒப்பிட்டுக்கூறுவார்கள்? சுற்றிலுமுள்ளவர்களின் உதடுகளசைவதினின்றும் அவர்கள் பேசுவதை அவன் தெரிந்து கொண்ட போதிலும் அவனால் ஒரு வார்த்தையும் கேட்கமுடியாமலாகின்றது. இதனாலேயே பிறர் மேல் வெறுப்பும் சந்தேகமும் அவன் கொள்ளுகிறான். ஏனெனில் அரைகுறையாகக் கேட்கப்பட்ட வார்த்தைகள் எவ்வளவு தப்பபிப்பிராயங்களையும் கெடுதிகளையும் விளைவிக்கின்றனவென்பதையாவரும் நன்கறிவார்களன்றோ!

கண்ணிழந்தவர்கள் தங்கள் ஞாபகசக்தி பலப்படுவதனால், பல காரியங்களை சாதிக்கும் திறமையைப் பெறுகின்றார்கள். இவ்வுண்மையைப் பல ஆங்கிலேய அந்தகர்களின் அநுபவத்தினின்றும் நாம் தெரிந்து கொள்ளலாம். இவ்வுலகில் சங்கீதத்திற்கிணையேயில்லை. அச்சங்கீதத்தைக் கேட்கப் பெறாதவன் எவ்வளவு துற்பாக்கியமுள்ளவன்! இப்பெருந் துக்கத்திற்கொரு பரிகாரமாக ஈசுவரன் அவனுக்கென்று ஒரு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்திருக்க வேண்டும். இயற்கையின் உயர்ந்த சங்கீத வாத்தியங்கள் போன்ற பறவைகள், காற்று, சமுத்திரம் இவைகளின் பெருமையை யறிய சக்தி யற்றவனுடைய ஜன்மம் எவ்வளவு வியர்த்தமாகத் தோன்றுகிறது!

ஓசைகள் சாதாரணமாக இருக்கும் நமக்கே சகிக்க முடியாமலிருக்கும் பொழுது, செவிடர்கள் அதை எப்படிப் பொறுப்பார்கள்? இவர்களுடைய அநுபவத்தினின்றும் யோசிக்குங்கால் எவ்வித ஓசையும் மகாகர்ண கடூரமாயிருக்க வேண்டும். நானும் சில காலம் இக்கஷ்டத்தை அநுபவித்திருக்கின்றேன். முழுமையும் செவிடனாகாத போதிலும், அரைகுறையாக காது கேட்காமல் தவித்த எனக்கு அநேகமாய் சித்தப் பிரமையுண்டாய் விட்டது. எப்பொழுதும் காதில் பலவித சப்தங்கள் விழுந்து கொண்டேயிருக்கும். சதாசர்வகாலமும் ஒரே ஓசை யென்றால், அதைச் சகிப்பது மிகவும் துர்லப மல்லவா? விரைவாயோடும் ரயில் வண்டி சப்திப்பது போலவும், மற்றும் பலவித ஓசைகளும் காதை விட்டு விலகா. இது ஓர் சிறு நரகாவஸ்தையேயென்பதிலென்ன சந்தேகம்? இதனால், பல செவிடர்கள் பித்தர்களாய் விடுகிறார்கள்.

இதுவும் பொறுக்கக் கூடுமாயினும், தனக்கு மிகவும் வேண்டியவர்களுடனும் பேச முடியாமல் காது செவிடாகியவன் விலக்கப்படுவது மிகவும் பரிதபிக்கத் தக்கதே. ஆகவே செவிடாயிருப்பதைக் காட்டிலும், அந்தகனாயிருப்பதே மேலென்று யோசித்துப்பார்க்கும் பொழுது விளங்கக் கூடும். கண்ணிழந்தவர்களுடைய துரதிர்ஷ்டத்தைக்குறைத்துக் கூறாமலேயே அதை விட செவிடாயிருப்பதானது பதின் மடங்கு அதிக துக்கத்தைக் கொடுக்கக் கூடியதென்பதைப் பற்றி வெகுவாய் விவரித்துக் கூறலாம். கண்ணுக்குப்புலப்படும் காயமானது, நம்மால் பார்க்க முடி-

யாவிடினும் இன்னும் இருமடங்கு வேதனையை யுண்டாக்கக் கூடிய பல்வலியைக்காட்டிலும் அதிகமான தயையை நம் மனதில் கிளப்புவது போலவே, அந்தகர்களுடைய ஊனமானது நம் கண்ணுக்குப் புலப்படுவதனுல் நாம் இரக்கம் கொள்ளுகிறோம். செவிடர்களுடையகஷ்டத்தைஅவர்கள் தான் அறிவார்கள். ஸ்திரீகளைப்பார்க்கிலும், புருஷர்கள் அந்தகர்களாவதைப்பற்றி நிரம்ப அஞ்சுவது விசேஷமாகத் தோன்றுகிறது. அந்தகர்களை விட செவிடர்களிடம் ஸ்திரீகள்தான் அதிக அனுதாபம் கொள்ளுகிறார்கள். அது எப்படியாயினும் இவ்விஷயத்தைப் பற்றி நாம் சிறிது யோசிப்பது முற்றிலும் நலமேயாகும். ஏனெனில், நம்மைச் சுற்றிலு முள்ள அநேகம் செவிடர்களுடைய துக்கத்தை நாம் சிறிது தணிக்கக்கூடுமே யன்றோ.

இறப்பினும் வழுவாக்கற்பு.

காளி என்னும் நதிக்கரையில், சாரங்கபுரம் என்ற சிறிய கிராமத்தைச் சுற்றிலும் பல பிப்பல விருட்சங்கள் மாமரங்கள் இவைகளடர்ந்து எங்கும் குளிர்ந்த நிழல் கொடுத்துக் கொண்டிருந்தன. அவ்விடத்திற்றான் ரூபமதி என்னும் மங்கை நல்லாள் ஒரு சிறிய தாழ்ந்த வீட்டில் வைசியர் குலத்தில் வந்து பிறந்தாள். யௌவனபருவத்தையடைந்து அவள் ரூபலாவண்யத்திற் சிறந்தவளாயிருந்தும், எங்கும் அவள் பெயர் பரவியது ஒப்புயர்வற்ற அவள சௌந்தரியத்தினாலல்ல; மற்றும் அவளது திவ்விய சங்கீதத்தினாலேயாம். பாட்டிலுள்ள ஞானம் முதிர முதிர அவள் குரல் பின்னும் இனிமையாகவே, சங்கீத சாஸ்திரத்தில் அவளுக்கிணையகப்படுவது துர்லப மென்னும் புகழையடைந்தாள்.

பாஸ் பகதூர் என்ற பட்டாணிப் போர்வீரன் மாளவ தேசத்தை அதன் நியாயமான அதிபதியிடமிருந்து கைப்பற்றியவனாய் அத்தேசத்திற்குத் தன்னையே அரசனாக்கிக்கொண்டான். சங்கீதத்தில் விசேஷ ஞானமும் தேர்ச்சியும் அவனும் பெற்றவனாயிருந்தான். கோரமான யுத்தத்தின் முடிவிலும், மிகுந்த உற்சாகத்துடன் வேட்டையாடித்திரும்பும் பொழுதும், சிரமத்தை யுண்டாக்கக்கூடிய தனது ராஜ்ஜியக்கடமைகளை செலுத்தியபிறகும்கூட, பாஸ் பகதூர் இனிமையாயும் தெளிவாயுமுள்ள நாதத்துடன் கூடிய தனது வாத்தியங்களை யெடுத்து வாசிப்பதில் மணிக்கணக்காக நேரத்தைச் செலவழிப்பது வழக்கம். எவ்வளவோ இரவுகள் தூங்காது பாட்டுகள் கட்டுவதிலும் பாடுவதிலுமே ஊக்கமாயிருப்பான்.

ரூபமதியின் நிகரற்ற புகழ் காதுகளுக்கெட்டியதாலோ அல்லது வேறெவ்வித காரணத்தாலோ நாமறியோம்—பாஸ் பகதூர் அம்மாது சிரோமணியையே விரும்பித்தன் மனைவியாக்கிக்கொண்டான். ஒரு மனமும், ஒரே எண்ணங்களும் பெற்று, சங்கீதத்தில் பேராவலும் பேராநந்தமும் குடிகொண்டவர்களாய், அவ்விருவரும் மிகுந்த ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். பாஸ்பகதூருக்கு ரூபமதியின் மேலிருந்த பிரியத்தில், அவளுடைய சிறு விருப்பமும் கட்டளை போலவும், வேதவாக்குப் போலவும் தோன்றியது. அப்பெண்ணரசியோ, அறிவீனமான எண்ணமொன்றும் கொள்ளாது அதிவிவேகம் பொருந்தியவளாய், படபடப்பான வார்த்தை சற்றேனுமின்றி தன்கணவனிடம் ஒழுகிவந்தாள். உலகிற்சிறந்த பல ரத்தினங்களையும், மாசு மறுவற்ற பிரகாசம் பொருந்திய முத்தாஹாரங்களையும், வெகு விநோதமான எண்ணிறந்த ஆபரணங்களையும், கொடிபோன்ற அவள் சரீரத்தை அலங்கரிக்க விசித்திரமான வேலைப்பாடமைந்த வஸ்திரங்களையும் பாஸ்பகதூர் தன்மனைவிக்கு அளித்தான். ஸ்வப்பனமயமான அழகுடன் கூடிய உபவனங்களையும், உயர்ந்த மாளிகைகளையும் அவள் பொருட்டு கட்டுவித்தான்.

இப்படியிருக்குங்கால், ரூபமதி, தன்ராஜ்யத்தையாளும் விஷயத்தில் ஒரு அரசன் சுறுசுறுப்பாய் ஊக்கமாயிருக்க வேண்டுமென்பதையும், ஜனங்கள் கூறும் வார்த்தைகளில் அவன் காதுகளும் அதிகூர்மையுடனிருக்க வேண்டுமென்பதையும், தன் தேசத்தை ரக்ஷிப்பதில் சலிப்பென்பது அவனை ஒருபோதும் அணுகலாகாதென்பதையும் மெதுவாய் மறக்கத் தொடங்கினாள், கணவனை எப்பொழுதும் தன்னுடன் இருத்திக் கொண்டு, யாழினுமினிய குரலுடன் புதிது புதிதானபாட்டுக்களிசைப்பதிலும், வெவ்வேறு விதமான வாத்தியங்களை வாசிப்பதிலுமே பொழுதைப் போக்கலானாள். அரசனும் வர வர, ராஜ்யகவலைகளிலும், வேலைகளிலும் வெறுப்புற ஆரம்பித்தான். ஏதாவது முக்கியமானஉத்திரவுகளளிக்க வேண்டும் பொழுது கூட, அதற்கவசியமான எழுது கருவிகள் கொண்டுவரப்படும்இடைநேரத்தில் இன்னும் சிறிது பாடிக்களிக்க முடிந்ததேயெனத் திருப்தி கொள்ளலானான். தனது பிரதான மந்திரிகள் ராஜ்யவிஷயமாய்ப் பேசக்காத்திருப்பதை மறந்து அவன் ரூபமதியுடன் அந்தப்புரத்தில் உத்ஸாகமாயிருக்கும் போது எவ்வளவோ முக்கியவிஷயங்கள் அரசன்விசாரணைக்குறைவினால் கெடுதி யுற, நாளடைவில் அவன்தேசமும் க்ஷீணதசையையடையத் தொடங்கிற்று. இன்னும்சிறிது நேரம் சங்கீத சாகரத்தில் மூழ்கியிருக்க முடியுமானால், வேறொன்றும்அவசியமுள்ளதாய் அவன்கண்களுக்குப் புலப்படவில்லை. தனது இனிய வாத்தியங்கள் அவைகள் நாதம் கெடாமல் எப்பொழுதும் சித்தமாயிருக்குமளவில், சூன்யமான, தூசிபடிந்த சிம்மாசனத்தோடு கூடிய தர்பார் மண்டபத்தில் பல வேண்டுகோள்களுடன் ஜனங்கள் அவன் வரவிற்காக வெகு நேரம் காத்திருந்து மனம் விட்டவர்களாய், அரசன் தங்களை அலக்ஷ்யம் செய்வதை யெண்ணி வருந்திக்கொண்டு சென்றாலும் தான் அவனுக்காகவேண்டிய தென்ன? ஒரு நம்பிக்கை யுள்ள அமைச்சனால் அவ்விராஜ்யம் முற்றிலும் நசிக்காவண்ணம் ரக்ஷிக்கப்பட்டு வரும் போது நாம் ஏன் இனி அதிக கவலை யெடுத்துக் கொள்ள வேண்டுமென பாஸ்பகதூர் கருதலானான்.

இவ்விதம் ஏழு வருஷங்கள் சென்றன. மொகலாய ராஜதானியாகிய டில்லியில், பராக்கிரமமுள்ள எந்த வீரனாலும் அபகரிக்கக் கூடிய நிலைமையில் ஒரு தேசமிருந்த தென்ற செய்தி யெட்டியது. சங்கீதத்தைத் தவிர வேறொன்றிலும் இச்சையற்ற அதன் அரசனைப் பற்றியும், விவேகமுள்ளவனாயிருந்தும், அதைச்சரியாய் ஆளத் திறமையற்ற அவன் மந்திரியைப் பற்றியும், பார்வைக் குறைவினால் குறைந்து போன சைன்யத் துறையைப்பற்றியும் செய்திகளெட்டாமற் போகவில்லை. சக்கிரவர்த்தியான அக்பரிடம் ஸர்தாராயிருந்த ஆடம்கானென்பவன் புகழிலும், பதவியிலும் பேராவல் கொண்டவனாதலால், மாளவ தேசத்தரசனை, அவன் சிறிதும் சன்னத்தனாயில்லாமலிருக்கும் சமயத்திலேயே, ரகசியமாய்ச் சென்று தாக்குவதாய்ச் சொல்லி அக்பரிடம் ஒரு சிறு சேனையை வேண்ட, அக்பரும் அவனிஷ்டப்படியே செய்யும்படிக் கூறி ஆடம்கானை அனுப்புவித்தார்.

ஒரு நாள், பாஸ்பகதூர் தன் அழகிய அரசியுடன் கானம் செய்து கொண்டிருக்கும் பொழுது, வெளியில் ஒரு பேரிரைச்சல் திடீரென அவர்கள் காதுகளில் விழுந்தது. சிறிது நேரத்திற்குள் அது வரவர சமீபத்தில் கேட்க, கடைசியாக மந்திரி பிரதானிகள், அரண்மனைச் சேவகர்கள் முதலானோரனைவரும் திகிலடைந்த குரலுடன் அரசன் பெயரைச் சொல்லித் தங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று கூவிக்கொண்டே உள்ளே பிரவேசிப்பதைக் கண்டார்கள். "மகாராஜா, எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும். பகைவர்கள் வந்து ஜனங்களை நாசமாக்குகிறார்கள்" என்று அவர்கள் பெருங்குரல் பாய்ச்சி அலறியதும், பாஸ்பகதூர் தன் சங்கீத மயக்கத்தினின்றும் தெளிந்து "மகாராஜாவுக்கு ஜயமுண்டாகட்டும்" என்ற ரூபமதியின் ஜயசப்தம் காதில் துவனித்துக்கொண்டேயிருக்க, அவ்விடத்தினின்றும் புறப்பட்டான். விரைவாய்க் கவசத்தை யணிந்து அவன் தன் சேனையை யழைத்ததும், மிகவும் குறைந்துபோய் அலங்கோலமான ஸ்திதியில் அதிருப்பதைக் கண்ணுற்று முதலில் ஆச்சரியமுற்றானாயினும், பிறகு அதைப்பற்றி யொன்றும் அவன் சிறிதும் கவனிக்கவில்லை. ஏனெனில் ஒரு போர்வீரனாயிருக்கும் தன்மை அவனைவிட்டு விலகி வெகுகாலமாகி விட்டது. அதற்குப்பதிலாக சங்கீதமானது ஏதோ ஒரு மாயவலையைச் சுற்றி விரித்திருப்பது போலும், அதில் பாஸ்பகதூர் சிக்கியிருந்தான். சண்டையில் அச்சிறு சைன்யம் சின்னாபின்னமாய்ச் சிதறுண்டுபோக, முடிவில் அவன் வேறு கதியற்று ஒரு காட்டிற் சென்று ஒளிந்துகொண்டான். வெகுகாலம் வரை அவனைப் பற்றிய சங்கதியே ஒருவருக்கு மெட்டவில்லை.

எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்த அரண்மனையில் ரூபமதி ஜயமடைந்து திரும்பும் தன் காதலனை வரவேற்க எதிர்நோக்கி உட்கார்ந்திருந்தாள். ஆனால் அதற்குப்பதிலாக, எதிர்பாராத விதமாய் ஒரு அன்னிய புருஷனின் காலடிச் சத்தம் அறைக்கதவின் சமீபம் கேட்க, அவள் ஹிருதயம் நடுக்கமுற்றது. எதிரிலிருந்த திரை தள்ளப்பட்டு அப்பொழுதுதான் யுத்த முனையிலிருந்து நேராகத் திரும்பிவந்தவன்போல் கவசமணிந்தவனாய் உயர்ந்த உருவமுடைய புருஷனொருவன் அவள் முன் நின்றான். அவ்வஞ்சா நெஞ்சத்தனான ஆடம்கானை திக்பிரமை கொண்டவளாய் வெறிபிடித்த பார்வையுடன் ரூபமதி நோக்கலானாள். அவள் நிலையைப் பார்த்து அவன் பரிகாசமாய் நகைத்து "என்னைக்கண்டு பயப்படுகிறாயா? ஆனால் உன்னைக்கண்டு நான் மிகுந்த திருப்திகொண்டேன். உன் கணவன் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறான்; இன்று நீ என் ஆசை நாயகியாயிருப்பாய்" என, ரூபமதி ஒன்றும் பதிற் சொல்லவில்லை. அவன் சென்றதும் அவள் கீழே விழுந்து "பிராணநாதா! எங்கு சென்றீர்? உம்மைத்தவிர அப்பெயரால் மற்றொருவனை நான் எவ்விதம் அழைப்பேன்? இக்கஷ்டத்தில் தாம் என்னைவிட்டு எவ்விதம் சென்றீர்? தம்முடைய மனைவி நான். சாகுந்தனையும் தமக்குண்மையாக விருப்பேன். யமலோகத்திற்கு நீர் கொண்டுபோகப்பட்டிருந்தால் அங்கும் நான் உம்மைப் பின்றொடருவேன். தாம் பிழைத்திருந்தால், ஒருக்காலும் என் கற்புகெடும்படியான சாபம் என்னைத்தீண்டாதிருக்கட்டும்." என்று புலம்பத் தொடங்கினாள். வெகுநேரம் அவள் தாங்க முடியாத துயரத்தில் மூழ்கியவளாய்த் தவித்துக்கொண்டிருக்கும் பொழுது, திடீரென ஓரொலியெழ, ஒருவாறு பிரகாசமான முகத்துடன் எழுந்துட்கார்ந்தாள். "பிராணநாதா! இதோ வருகின்றேன்" என்னும் சொல் அவள் வாயினின்றும் கிளம்பியது. பகல் முடிந்து இரவு சமீபிக்க, இன்னும் சிறிது பொழுதிற்கெல்லாம் ஆடம் கான் தன் ஆசை நாயகியைக்காண வந்துவிடுவான். அவனை வரவேற்க அவளும் ஒரு ராணிக்குத்தக்க மரியாதையுடன் சித்தமாயிருக்க வேண்டுமல்லவா? "சீக்கிரம் என்னை அலங்கரியுங்கள். என் காதலன் முன்பு நான் இன்று இணையற்ற சௌந்தரியத்துடன் விளங்க வேண்டும்." என்று அவள் தன் பணிப்பெண்களை அவசரப்படுத்த, பயத்தினால் பீடிக்கப்பட்ட அப்பெண்களும் அவளை வெகு அழகாய் அலங்காரம் செய்தார்கள். முன்பெந்தவிடத்தில் அநேகம் நாட்கள் அவள் பாஸ்பகதூருடன் சுவர்கத்திற்குச்சமமான சுகத்தை அனுபவித்தாளோ, அவ்விடமானது இப்பொழுது முன்னிலும் பிரகாசமாய் ஜோடிக்கப்பட்டது. புஷ்பங்களின் நறுமணம் நான்கு பக்கங்களிலும் வீச, வாசனை பொருந்திய நீரையுடைய ஜலதாரைகள் மிகுந்த குளிர்ச்சியை யுண்டாக்கின. நடுவில் போடப்பட்ட விசாலமான கட்டிலின்மேல் உயர்ந்த படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு மெல்லிய துகிலால் தன் முகத்தை மறைந்தபடி அழகிற் சிறந்த ரூபமதி படுத்திருந்தாள். விதம் விதமான விளக்குகள் மெதுவாய், மங்கிய வெளிச்சத்துடன் பிரகாசித்துக்கொண்டிருந்தன. கூடிய சீக்கிரத்தில் ஆடம் கானும் தன் கவசத்தைக்களைந்து விலையுயர்ந்த ஆடைகளணிந்து உள்ளே பிரவேசித்தான். அங்கெதிர்பட்ட காக்ஷியைக்காண அவன் ஹிருதயம் ஆநந்த சாகரத்தில் முழுகிற்றென்பதை நாம் கூறவும் வேண்டுமோ? கதவின் சமீபம் நின்றுகொண்டிருந்த வேலைக்காரப் பெண்ணின் மௌனமான அழுகைச் சப்தம் அவனுக்குக் கேட்கவில்லை. கட்டிலின் சமீபம் சென்று ரூபமதியைக் குனிந்து நோக்கியதும் அவள் இதழ்களில் தவழ்ந்த புன்னகையைக் கண்டு மிகவும் களிப்பெய்தியவனாய் "என் கண்மணியே!" என்று அழைத்து ஆடம் கான் ஆபரணங்களிடப் பெற்று படுக்கையின் ஒரு ஓரம் தொங்கிய சிறிய கரத்தைப் பிடித்து முத்தமிடச் சென்றான். அந்தோ! பனிக்கட்டி போலும் அக்கை ஜில்லென்றிருந்ததைகாணவே அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது போலாயிற்று. ஒன்றும் தோன்றாமல் அவள் மார்பில் கைவைத்துப் பார்த்தான். அதுவும் சலனமற்று ஸ்தப்தமாயிருந்தது. மிகவும் திகிலுற்று அவன் அவ்விடம் விட்டுச் செல்ல, இறக்கும் வரையும் தன் கற்புக் கெடாத ரூபமதி தூங்குபவள்போல் அமைதியாய்த்தன் படுக்கையிற் படுத்திருந்தாள். விஷம் அதன் வேலையை அவ்வளவு விரைவாய்ச் செய்திருந்தது. அவள் தலையணையின்கீழ் ஒரு சிறு காகிதத்துண்டு காணப்பட்டது. அதில் "ஓ பிளவுற்ற ஹிருதயமே! உன் கணவனைவிட்டு உனக்கானந்தமேது? இவ்வுலகில் தனியாய்ப் பின்தங்கி நிற்பது துக்கத்திற்கே ஹேதுவாதலால் நானும் இதோ வந்துவிட்டேன்." என்று வரையப்பட்டிருந்தது. சாவுக்கு மஞ்சாத கற்பு நெறிகொண்டு ஒழுகிய இவ்வுத்தமியைக் காட்டிலும் "கற்பென்பதே மாதற்கணிகல" மென்னும் உயர்ந்த நீதி வாக்கியத்திற்கு வேறு உவமையுண்டோ!

சித்திரா

ஸீன் 3

சித்திரா—முடியாது. அது ஒருபோதும் சாத்தியமல்ல. உள்ளே எங்கிநிற்கும் ஜீவன் பிடித்திழுப்பதுபோல் என்னைத் தன்பால்கட்டி வலிக்கும் அக்காதற் பெருக்கு ததும்பி நிற்கும் பார்வையை

எதிர் நோக்கிய பிறகு—உடல் முழுவதும் தன்னு சையைப் பரவச் செய்து, அவர் ஹிருதயம் சகல பந்தங்களையும் மீறத்தவித்துக் கொண்டிருப்பதை யறிந்தபிறகு—அவரை ஓர் பிச்சைக்காரனைப் போல் என்முன் விட்டுத்துரத்துவதா? இல்லை. அது ஒருக்காலும் முடியாது.

மன்மதனும் வசந்தனும் வருகிறார்கள்

ஐயா! என்னைச்சுற்றிலும், முழுமையும் தாம் சூழச்செய்திருக்கும் இதென்ன கோரமான நெருப்புத்திரள்? நான் எதைத் தொட்டபோதிலும் என் தேகம் வெந்தழல் வீசுகின்றதே.

மன்மதன்—நேற்றிரவுஎன்னநடந்த தென்பதை யறிய விரும்புகிறேன்.

சித்திரா—வசந்தபுஷ்பங்களினிதழ்களால்பரப்பப்பட்ட புறபடுக்கையின்மீது சாய்ந்து நேற்றுமாலை நான் என் சௌந்தரியத்தைப் பற்றி அர்ச்சுனன் புகழ்ந்து கூறிய, அதிசய வார்த்தைகளை யெண்ணிக்கொண்டிருந்தேன். பகலில் சேமித்துவைத்த அத் தேனை ஒவ்வொரு துளியாக ருசி பார்த்துக் கொண்டிருந்த எனக்கு, முன்பு நடந்தவைகள்யாவும் முற் பிறப்பிற்றோன்றியவைகளைப் போல் நினைவைவிட்டகன்று விட்டன. வண்டுகளின் ஸ்தோத்திரம் புரிவதுபோன்ற ரீங்காரத்துவனியையும், மெதுவான ஓசையுடன் இலைகளசைவாடுதலையும் சிறிது நேரம்மட்டுமே கேட்டுக்களிக்க விதிக்கப்பட்டு, பிறகு, ஆகாயத்தை நோக்கி நிற்கும் தன் இதழ்களைக் கீழேதாழ்த்தித் தலை குனிந்து ஒரு இமைப்பொழுதில் ஒரு சிறு சப்தமும் செய்யாமல் மண்ணின் மீது வீழ்த்தம் பெறும் மலர் போன்றவளென நான் என்னைப் பாவித்தேன். ஆதியும் அந்த முமற்று அவ்வொரேஒரு அருமையாயும், விசேஷமானதாயுமுள்ள நிமிஷத்தை யுடையதாய் அப்புஷ்பமும் தன் சிறு ஜீவியசரித்திரத்தை முடித்து விடுகிற தல்லவா ?

வசந்தன்—எல்லையற்ற பெருமையை யுடைய வாழ்க்கையானது ஓரே பகலில் மலர்ந்து வாடிவிடும் தன்மை யுள்ளது.

மன்மதன்—ஆம் ; பாட்டின் ஒரு அடியிலுள்ள எண்ணிறந்த அர்த்தம் போல.

சித்திரா—தென்றற் காற்றானது என்னை மெதுவாய்த் தாலாட்டுவது போலுறங்கச் செய்ய, என் தலைக்கு மேல் அடர்ந்து படர்ந்திருந்த மாலதிக் கொடியிலிருந்து மலர்களும் சத்தம் செய்யாமல், முத்தங்கள் போன்று என் மேல் உதிர்ந்தன. அவை என் கூந்தல், மார்பு, பாதங்கள் இவ்விடங்களில் ஒவ்வொன்றாய் விழுந்து வாடிக் கொண்டிருந்தன. என்னை நித்திரை வசமாக்கிக் கொள்ள, நான் சீக்கிரத்திலுறங்கி விட்டேன். அச்சமயத்தில், திடீரென என் ஆழ்ந்த நித்திரையின் மத்தியில் நெருப்புஜ்வாலை போல் தகிக்கும், விவரிக்க வொண்ணாத ஆசையுடன் கூடிய பார்வையுடன் யாரோ என்னை நோக்கிக் கொண்டிருப்பது போலத் தோற்றியது. நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டதும், என் முன் அவ்விளம் சன்னியாசி நின்று கொண்டிருக்கக் கண்டேன். இந்நுட்பமான மானிட சரீரத்தி வியந்றப் பட்ட அத்புத சக்தியின் பெருமையைக்காண இலைகளின் வழியாய் நோக்கிக் கொண்டே சந்திரனும் மேற்குத் திசையில் நகர்ந்தான். எங்கும் புஷ்பங்களின் நறுமணம் கமிழ்ந்து கொண்டிருந்தது. நிச்சப்தமான அவ்விரவில் சுவர் கோழிகளி னொலி கேட்டுக் கொண்டேயிருக்க, விருட்சங்கள் யாவும் அசை வாடுதலை ஒழித்து நின்றன. தன்தண்டத்தைக் கையிலேந்திய வண்ணம் அச்சன்னியாசி ஒரு காட்டு மரம்போல் சிறிதும் வளையாத உயர்ந்த உருவத்துடன் அசையாது நின்றார். கண்களைத் திறந்து பார்த்ததும், நான் மானிட வாழ்க்கையில் தோன்றக் கூடிய யாவற்றிற்கும் இறந்தவள் போலாகி, இருள் படிந்த மற்றொரு தேசத்தில் ஜன்ம மெடுத்தவளாக என்னை எண்ணலானேன். மானமானது வஸ்திரம் தளர்ந்து போவதே போல் என் காலடியில் நழுவி விழுந்தது. "என் அன்பே!" என்று அவர் கூப்பிடுவதைக் கேட்டேன். உடனே நான் மறதியுற்றிருந்த என் சகல முற்பிறப்புகளும் ஒன்று சேர்ந்து என்னை அதற்கு பதிலுரைக்கத் தூண்டின. "என் சர்வத்தையும் நான் தமக்களித்துவிட்டேன். எடுத்துக் கொள்ளும்" என்று கூறி அவர்முன் கைகளை நீட்டினேன். மரங்களுக் கிடையே சந்திரன் மறைய எங்கும் இருள் திரை மூடியது போல் சூழத்தலைப்பட்டது. ஆகாயம், பூமி, காலம், வெளி, சந்தோஷம், துக்கம், பிறப்பு , இறப்பு, இவையாவும் விவரிக்க முடியாதவோர் இன்ப வெள்ளத்தில் அழுந்திக் கிடந்தன. கீழ்த்திசையில் வெளிச்சம்தோன்றி பறவைகளின் குரல் கேட்கத் தொடங்கியதும் நானெழுந்து என் இடதுகையின் மேல் ஊன்றியபடி உட்கார்ந்தேன். விடியற் காலையில் தோன்றும் இளம் பிறை போன்றவோர் சிறு புன்னகை தன் உதடுகளில் தவழ அவர் உறங்கிக் கொண்டிருந்தார். சிவந்த அருணோதயத்தின் வெளிச்சம் அவரது கம்பீரமான நெற்றியின் மீது படிந்தது. ஒரு பெரு மூச்சுடன் நானெழுந்து ஒவ்வொரு நிமிஷமும் உக்கிரமாகும் சூரியனின் கிரணங்கள் அவர் முகத்தில் படாதிருக்கும்படி அங்கு கிடந்த இலைகளை யெல்லாம் ஒன்று சேர்த்தேன். பிறகு நாற்புறமும் நோக்கும் பொழுது முன்பிருந்த பழைய விடமே கண்களிற்பட்டதும் என்னுடைய பூர்வ நிலைமைஎன் ஞாபகத்திற்கு வந்தது. உடனே தன் நிழலைக்கண்டே அச்சங்கொள்ளும் பெண் மான் போல் அவ்விடத்தை விட்டு "ஷெபலி" (Shephali) புஷ்பங்கள் இறைந்து கிடந்த காட்டு மார்க்கமாய் அதிவிரைவாயோடி, ஒரு தனிமையான இடத்திற்கு வந்து சேர்ந்தேன். அங்கு கீழே உட்கார்ந்து என் முகத்தை இரு கைகளாலும் மூடி நான் வாய் விட்டு அழமுயன்றும் என் கண்களில் ஒரு துளிக் கண்ணீரும் உண்டாகவில்லை.

மன்மதன்:—அந்தோ! மானிட ஜாதியிற் பிறந்த பேதைப் பெண்ணே! தெய்வீகமான பொருட்கள் நிறைந்துள்ள வோர் இடத்திலிருந்து ஸ்வர்கத்திலுள்ள வாசனை பொருந்திய மதுவைத்திருடி நான், ஒரு இரவு அது முற்றிலும் ததும்பும் வண்ணம் நிறப்பி, நீ அருந்துவதன் பொருட்டு உன்கையிலளித்தேன். இன்னும் இத்துக்கப்புலம்பலா?

சித்திரா—(வெறுப்புடனும், துக்கத்துடனும்) அம்மதுவை அருந்தியது யார்? என்வாழ்க்கையில் நான் கொள்ளக் கூடிய ஓரே மனோர்தம் நிறைவேறுவதானது—மெய்யன்பின் முதன் முதற் சேர்க்கையானது எனக் களிக்கப்பட்டுப் பிறகு என் கைகளிலிருந்து பிடுங்கப் பட்டது எப்பொழுது? எனக்குச் சொந்த மல்லாத இவ்வழகு—என்னைச் சுற்றிலும் சூழ்ந்துள்ள இவ்வசந்தியம் நன்றாய் மலர்ந்த புஷ்பத்திலிருந்து இதழ்கள் உதிருவதுபோல், அச்சேர்க்கையினுடைய அவ்வொரே ஞாபக சின்னத்துடன் என்னை விட்டு நழுவிவிடும். பிறகு, தன் தரித்திரத் தன்மையைக் காண வெட்கமுற்று நான் சதா அழாமல் எப்படியிருப்பேன்? ஐயா! இக்கஷ்ட காலத்திற்கறி குறியான பொய் தோற்றம் என்னுள்ளம் ஏங்கிநிற்கும், மெய்க்காதலின் பரிசுகளாகிய எல்லா முத்தங்களையும் ஒரு அரக்கனைப்போல் என்னிடமிருந்தபகரி

த்துக் கொண்டு என்னுடன் எப்பொழுது மிருக்கின்றதே.

மன்மதன்—ஆஹா! உனக்களித்த ஒரு இரவை நீ எப்படி வீணாக்கி விட்டாய்! சந்தோஷமாகிய சிறுபடகு கண்களிற் தென்பட்டும், அலைகள் அதைக்கரையிற் சேர வொட்டாமல் தடுக்கின்றன போலும்.

சித்திரா—சுவர்க்கமானது என்கைகளுக்கு வெகு சமீபம் நெருங்கிய படியால், அது இன்னும் முற்றிலும் என்னை யணுகவில்லை யென்பதை நான் ஒரு நிமிஷம் மறந்து விட்டேன். ஆனால், என்ஸ்வப்பனத்தினின்றும் நான் காலையில் விழித் தெழுந்தும், என் சரீரமே எனக்குப் போட்டியாகக் கிளம்பிய விரோதியெனக் கண்டேன். ஒவ்வொரு நாளும் இச்சரீரத்தை அலங்கரித்து என்காதலனிடம் கொண்டுபோய் அவர் அதை அணைந்து கொஞ்சுவதைக் காண்பது எனக்குப் பொறுக்க முடியாத வெறுப்பைத் தருகின்றது. ஐயா! தமது வரத்தை எடுத்துக் கொள்ளும்.

மன்மதன்—நான் அப்படியே செய்வேனாயின், மீண்டும் நீ உன் காதலன் முன் எப்படிப் போய் நிற்பாய்? இன்பமாகிய மதுவை ஒரு வாய் அருந்துவதற்கும் முன்னால் அவன் கைகளிலிருந்து கிண்ணத்தைப் பிடுங்குவது குரூரமல்லவா? அப்பொழுது எவ்வளவு கோபத்துடனும், வெறுப்புடனும் அவன் உன்னை நோக்குவானென்பது உனக்குத் தெரியுமா?

சித்திரா—இதை விட அது எவ்வளவோ சிறந்ததாயிருக்கும். என் சுபாவமான நிலைமையில், நான் எப்பொழுது மிருப்பது போல் அவர் முன் தோன்றுவது, இப் பொய்யான வெளிவேஷத்தை விடப் பதின் மடங்கு உயர்ந்தது. அவர் என்னைப் புறக்கணித்து என் ஹிருதயத்தைப் பிளந்தாற் கூட நான் அதையும் மௌனமாய்ச் சகித்துக் கொண்டிருப்பேன்.

வசந்தன்—நான் சொல்வதைக் கேள். கிரீஷ்ம காலம் வரும்பொழுது புஷ்பங்கள் ஓயத்தொடங்கி பழங்களுண்டாகும் நாள் வரும். சரீரத்தின் போகத்தால் தெவிட்டடைந்த யௌவன மலர் வாடி வதங்க, உன்னுள்ளிருக்கும் என்றும் பலனை யளிக்கும் உண்மைத் தன்மையை அர்ச்சுனன் சந்தோஷமாய் அங்கீகரிக்கும் காலமும் தானே உண்டாகும். பெண்ணே! போய் உன் உத்சவத்தைக் கொண்டாடு.

சுதேசியமானது!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல, ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

காஞ்சீபுரம் கருடசேர்வை

விளம்பரங்கள்.

நாளது வைகாசி௴ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டு பிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், விநியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்

அளவு 27" × 17" மேற்படாத

பிரகடனங்கள்

ஜட்காவண்டி

மேற்கூரையில் ஒட்டுவதற்கு

நூற்றுக்கு

தினத்திற்கு ரூ. 5-0-0

வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தரவரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.